## 12. தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

-----------------------------------------------------------------------------------------------

### 12.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

-----------------------------------

**பாதீட்டு முரண்கள்**

------------------------------

எட்டுச் செலவின விடயங்களுக்கு ரூபா 2,683,162 மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 12.2 கட்டு நிதிக் கணக்கு

----------------------------------

ஆணைக்குழு அலுவலகத்தில் செயல்நிமித்த உப கட்டுநிதியை வழங்குதல் மற்றும் தீர்த்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்குவதற்கு முன்னர் செயற்பாட்டிற்குரிய செலவினம் மதிப்பிடப்பட்டு அந்த மதிப்பீட்டின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உப கட்டு நிதி வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்படாது 09 சந்தர்ப்பங்களின்போது ரூபா 108,000 கூட்டுத் தொகையான கட்டு நிதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 41,044 கூட்டுத் தொகை செலவிடப்பட்டதன் பின்னர் ரூபா 66,956 கூட்டுத் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் அடிப்படையில் உப கட்டு நிதி விநியோகிக்கப்படாமையினால் அரசாங்கத்தின் நிதியை ஏனைய தரப்பினர் கையில் வைத்திருப்பதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழு அலுவலகத்தில் வாகனங்களை சேர்விஸ் செய்வது உரிய வாகன முகவர் மூலம் நேரடியாக நிறைவேற்றப்பட முடியுமாயினும், அவ்வாறல்லாது அதற்காகவும் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 05 சந்தர்ப்பங்களில் வாகனங்களை சேர்விஸ் செய்வதற்காக ரூபா 95,000 கூட்டுத் தொகையான உப கட்டு நிதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 57,806 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 37,194 கூட்டு மொத்தமாக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) 18 சந்தர்ப்பங்களின்போது ரூபா 285,940 கூட்டுத் தொகையான செயல்நிமித்த உப கட்டு நிதி வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய உத்தியோகத்தர்கள் அம்மொத்தக் கட்டு நிதியையும் 03 நாட்கள் முதல் 18 நாட்கள் வரையிலான கால வீச்சில் கையில் வைத்திருந்ததன் பின்னர் மொத்தத் தொகையையும் காசாகத் தீர்த்திருந்தனர்.

**12.3 இலஞ்ச சுற்றிவளைப்பு இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழக்குப் பொருள் பொறுப்பு உத்தியோகத்தரின் பதிவேட்டின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 15,502,902 ஆக இருந்த போதிலும், முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 15,719,482 ஆனமையால் ரூபா 216,580 வேறுபாடு காணப்பட்டது. 4 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான பழைய வழக்குப் பொருட்களின் பெறுமதியான ரூபா 5,203,402 இற்குரிய சில பொருட்களுக்கு பண விடுவிப்புச் செய்வதற்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக 2012 இன் சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கு தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவிற்கு 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**12.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

மீளாய்வாண்டின்போது ஆணைக்குழுவின் 06 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கையும் பூரண அறிக்கையும் 2015 மே 28 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**12.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 20 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 60 | 57 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 66 | 60 | 06 |
| | மொத்தம் | 165 | 138 | 27 |